**முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**
**OS.NO.81/2025**

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | : | 1 |
| பெயர் | : | C.காளிமுத்துராஜா |
| தகப்பனார் பெயர் | : | |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 06-ம் நாள் வெள்ளிக்கிழமை திருமதி.K.அறிவொளி.எம்.எல்., முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன்.

1.24.02.2015ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட பதிவு பெற்ற தான செட்டில்மெண்ட ஆவண எண்.647/2015 அசல் வா.சா.ஆ -1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 19.08.2015ம் தேதியிட்ட வழக்கிடை சொத்துக்களைப் பொறுத்து (மூன்று சொத்துக்கள்) ரூ.19,00,000/-க்கு வாதி பெயரில் ஏற்படுத்திக் கொண்ட கிரைய ஆவணம் அசல் வா.சா.ஆ - 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 19.08.2015ம் தேதியிட்ட 1வது இலக்க சொத்தைப் பொறுத்து வாதி பெயரில் ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஆவண எண்.2692/2015 அசல் வா.சா.ஆ -3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 31.03.2015ம் தேதியிட்ட 2,3 இலக்க சொத்துக்களை் பொறுத்து1ம் பிரிதிவாதி, மதுரை ஆக்சிஸ் வங்கியில் பெற்ற கடன் தொகைக்கு ஆதரவாக ஏற்படுத்திக் கொண்ட Memorandum of Agreement evidencing deposit of titles அசல் வா.சா.ஆ - 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 15.03.2024ம் தேதியிட்ட 2, 3 இலக்க சொத்துக்களைப் பொறுத்து 1ம் பிரதிவாதி, மதுரை ஆக்சிஸ் வங்கியில் பெற்ற கடன் தொகையை திருப்பி செலுத்திய வகையில் ஆக்சிஸ் வங்கி திருப்புவணம் சார்பதிவத்தில் வைத்து எழுதிக்கொடுத்த செல் ரசீது சான்றிட்ட நகல் வா.சா.ஆ -5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 08.04.2025ம் தேதியிட் 2, 3 இலக்கச் சொத்துக்களை பொறுத்த திருப்புவனம் சார்பதிவக வில்லங்கச் சான்றிட்ட நகல் வா.சா.ஆ -6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 10.04.2025ம் தேதியிட்ட பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பு அனுப்பிய பதில் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ -7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 12.04.2025ம் தேதியிட்ட பிரதிவாதிகள் சட்ட அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கு ஆதரவாக அஞ்சல் துறை சேவை இணை வழி தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட அசல் வா.சா.ஆ -8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிராதுப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.06 18:41:11 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை